HYM

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024

11 - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 14 X 1 = 14

1. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
2. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
ஆ) வினைத்தொகை, இடவாகு பெயர் இ) வினையெச்சம், வினைத் தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன எவை? அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
4. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார், யாரிடம் கூறியது? அ) அமைச்சர் கவிஞரிடம்
ஆ) அமைச்சர் மன்னரிடம் இ) மன்னர் அமைச்சரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
5. "யாரே உனைப்போல் அனுதினமும் உழைப்போர்" – இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்
6. காப்பிய இலக்கணம் முழுவதுமாய் நிரம்பிய நாடக நூல் (தமிழின் முதல் பா வடிவ நூல்)
அ) திருக்குறள் ஆ) மணிமேகலை இ) மனோன்மணீயம் ஈ) நீலகேசி
7. யானை டாக்டர் என்னும் சிறுகதை எந்த சிறுகதை தொகுப்பில் உள்ளது?
அ) அறம் ஆ) அழைப்பு இ) கனிவு ஈ) கிழித்த கோடு
8. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை? அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
9. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ......... என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
10. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே .......... . அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
ஆ) வழிபாடு, பயன்பாடு, செய்தி இ) வழிபாடு, பயன்பாடு, செய்த ஈ) பயன்பாடு, செய்த, வழிபாடு
11. ஆக்கப் பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க. அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்
12. "ஜனப்பிரளயம்" - என்னும் வடமொழிச் சொல்லுகுரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்களவை
13. "மு" - என்னும் பெயரில் கவஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது. "கவிதை கிரீடம்" - என்று போற்றப்படுவது
அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
14. மொழிமுதல், எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) மாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

### பகுதி - II

(பிரிவு - 1) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 2 = 6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?
17. ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்னனுஞ் செல்வமே பழுத்த சேணகர்! – இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
18. "கற்றேன் என்பாய் கற்றாயா" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 2 = 4

19. நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. மதிப்புக் கூட்டுப்பொருள்கள் என்றால் என்ன?
21. திருவாயில்கள் என்றால் என்ன? அவை எங்கெங்குள்ளது?

பிரிவு - 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 X 2 = 14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. 1) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிடும். 2) முயற்சி செஞ்சா அதுக்கேற்ற பலன் வராம போவாது.
23. கலைச்சொல் தருக. 1) Value Education 2) Education committee
24. தொடர் அமைத்து எழுதுக. அன்றொருநாள், நிழலிலிருந்து.
25. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை?
26. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) கல்விக் கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

27. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) புகழெனின் ஆ) பொதுச்சிறப்பு
28. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
29. இலக்கணக் குறிப்புத் தருக. அ) மாநகர் ஆ) சூழ்ந்த
30. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. பொரி, பொறி

**பகுதி – III (பிரிவு – 1)**

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 X 4 =

31. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
32. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
33. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
34. 'சலச வாவியில் செங்கயல் பாயும்' – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

(பிரிவு – 2) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக. 2 X 4 = 8

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. தாமஸிகம் என்றால் என்ன?
37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

(பிரிவு – 3) எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக. 3 X 4 = 12

39. அ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. *(அல்லது)*
ஆ) சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்தினை எழுதி எவையேனும் மூன்று நயங்கள் எழுதுக.)

*மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே ! ஒரு*
*வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!*
*வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்*
*வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!*
*சுகமை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்*
*கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!*
*பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்*
*பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!* – கவிமணி

41. பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்குக.
42. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். *(அல்லது)*
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
43. அ) தமிழாக்கம் தருக. 1. The pen is mightier than the sword.
2. Winners don't do different things, they do things differently.
3. A picture is worth a thousand words. 4. Work while you work and play while you play.
ஆ) மாற்றுத் திறனாளிக்கான வினா. கீழுள்ள பத்தியைப் படித்து விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்ற விடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே" மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

வினாக்கள் : 1) தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2) பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக. 3) தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

**பகுதி – IV**

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 X 6 = 18

44. அ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக. *(அல்லது)* ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
45. அ) கல்லும் கதை சொல்லும் – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. *(அல்லது)* ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன. – கூற்றினை மெய்ப்பிக்க.
46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? *(அல்லது)* ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப்பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்தெழுதுக.

**பகுதி – V**

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6
அ) "அம்ம வாழி" – எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "பகை" என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com